**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: **20.07.2026**
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## இளமறிவியல் மாணவர் சேர்க்கை 2026–2027
## பொதுக்கல்விப்பிரிவு (Academic Stream) இடஒதுக்கீட்டிற்கான
## முதற்கட்ட மாணவர் சேர்க்கை

இந்த கல்வியாண்டில் (2026–2027) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 14 இளமறிவியல் பாடப்பிரிவுகளுக்கும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் 3 இளமறிவியல் வேளாண்பாடப்பிரிவுகளுக்கும் ஒரே இணையதள விண்ணப்பம் வழியாக மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது.

1. இணையதள வாயிலாக மொத்தம் 26,709 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. அதில் 24,435 விண்ணப்பங்கள் தகுதியானவைகாக தேர்ந்தெடுக்கப்பட்டன. இவர்களில் 15,757 பேர்கள் பெண்கள் ஆவர்.

2. இவற்றில் அரசுக் கல்லூரிகளில் 2,856 இடங்களுக்கும் தனியார் இணைப்புக் கல்லூரிகளில் அரசு இடஒதுக்கீடான 3,051 இடங்களுக்கும் இணையவழி கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட உள்ளன.

3. தற்பொழுது இணையவழி கலந்தாய்வில் பொதுக்கல்விப்பிரிவு (Academic Stream) இடஒதுக்கீட்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பத்தார்களுக்கு அவர்களுடைய தரவரிசை மதிப்பெண், விருப்பப்பாடம் மற்றும் சாதிய அடிப்படையில் தற்காலிக சேர்க்கை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு சேர்க்கைப்பெற்ற மாணவர்களுக்கு 22.07.2026 முதல் 25.07.2026 வரை சான்றிதழ் சரிபார்ப்பு கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது.

4. இத்தகவல் தற்காலிகமாக இடஒதுக்கீடு பெற்ற மாணவ/ மாணவியர்களுக்கு அவர்கள் பதிவு செய்த மின்னஞ்சல் (email) முகவரி மற்றும் அலைபேசி எண்ணிற்கும் அனுப்பப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட மாணவ / மாணவியர்களின் பட்டியல் http://tnau.ucanapply.com என்ற சேர்க்கைக்கான இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

5. **இணையவழி கலந்தாய்வில் பொதுக்கல்விப்பிரிவு (Academic Stream) இடஒதுக்கீட்டில் தற்காலிகமாக தேர்வு பெற்ற விண்ணப்பத்தார்களுக்கான வழிகாட்டி நெறிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

I. தற்காலிகமாக தேர்வு பெற்ற விண்ணப்பத்தார்கள் அவர்களுக்கு குறிப்பிட்ட தேதியில் கட்டயமாக கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்ள வேண்டும்.

II. அசல் சான்றிதழ் சரிபார்ப்பிற்குபின், மாணவர்கள் அவர்களுடைய கல்விச் சான்றிதழ்களான 10–ம் மற்றும் 12–ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல், சாதிச் சான்றிதழ் (Community Certificate) மற்றும் மாற்றுச் சான்றிதழ்களை (Transfer Certificate) வேளாண் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அசல் சான்றிதழ்களின் சமர்ப்பிற்குப்பின், மாணவர்கள் அவர்களுடைய இடஒதுக்கீட்டினை உறுதி செய்ய **ரூபாய்.20,000/-**ஐ சேர்க்கை கட்டணமாக கட்டயமாக செலுத்த வேண்டும்.

**இல்லையெனில் அவர்களுடைய இடஒதுக்கீடு இரத்து செய்யப்பட்டு காலியிடமாக கருதப்படும்.**

**மேலும் விவரங்களுக்கு**

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்.**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்வி பாடங்களுக்கான விவரங்களை 9488635077, 9486425076 என்ற அலைபேசி எண்களிலும் ugadmissions@tnau.ac.in என்ற மின்னஞ்சல் மூலமாகவும் வாரநாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை தொடர்புகொள்ளலாம்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***